தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நந்தன, பங்குனி 22, திருவள்ளுவர் ஆண்டு – 2044

2013 ஏப்ரல் 4, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

*"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு."*

மணற்கேணியில் எந்த அளவிற்குத் தோண்டுகிறோமோ அந்த அளவிற்கு நீர் ஊறும். அதுபோல, மக்கள் எந்த அளவிற்குக் கற்கிறார்களோ, அந்த அளவிற்கு அறிவு பெருகும்.

1. வினாக்கள்--விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

135—

கருவூலம்

***12349—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, ஆம்பூரில் உள்ள வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் கருவூலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒரு வருவாய் வட்டத்திற்கு ஒரு சார் கருவூலம் என்ற அடிப்படையில் கருவூல அமைப்பினைச் சீரமைக்க, தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அம்முடிவிற்கேற்ப, ஆம்பூர் வருவாய் வட்டத்தில் புதிய சார்நிலைக் கருவூலம் அமைப்பது தொடர்பான கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009 ஆம் ஆண்டு ஆம்பூர் தாலுகா உருவாக்கப்பட்டது. ஆம்பூர் தாலுகா 79 வருவாய் கிராமங்கள், 5 உள் வட்டங்கள் கொண்டிருக்கிற ஒரு தாலுகாவாகும். தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள ஆம்பூர் தாலுகா, வளர்ந்து வருகின்ற ஒரு மிகப்பெரிய நகரமாக இருக்கிறது. கருவூலத்திற்குச் செல்லவேண்டுமென்று சொன்னால், ஆம்பூரிலிருந்து 18 கிலோமீட்டர் தொலைவிலுள்ள வாணியம்பாடிக்குச் செல்லவேண்டும். வாணியம்பாடியிலிருந்து மூன்று கிலோமீட்டர் உள்ளே செல்லவேண்டும். அதேபோல என்னுடைய தொகுதியின் கடைக்கோடியில் இருக்கின்ற ஆசனாம்பட்டிலிருந்து கருவூலத்திற்குச் செல்லவேண்டுமென்று சொன்னால், 45 கிலோமீட்டர் தூரம் செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பொதுமக்களின் நலன் கருதி, இந்தக் கருவூலத்தை இந்த நல்லாட்சியிலேயே வெகுவிரைவில் அமைத்துத் தருமாறு கேட்டு, அப்படி அமைத்துத் தரப்படுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின் முக்கியத்துவத்தை மாண்புமிகு அம்மா

2013 ஏப்ரல் 4]

அவர்களுடைய அரசு உணர்ந்திருக்கிறது. ஆம்பூரில் சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்கு குடியாத்தம் மற்றும் வாணியம்பாடி சார்நிலைக் கருவூலங்களிலிருந்து பணிகள் பிரிக்கப்பட்டு அதற்குரிய பூர்வாங்கப் பணிகள் ஆய்வில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, ஆம்பூரிலே சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை சீக்கிரம் எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் சார்நிலைக் கருவூலம் விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரில் ஒரு சார்நிலைக் கருவூலம் அமைத்துத் தர மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து வட்டங்களிலும், ஒரு வட்டத்திற்கு ஒரு சார்நிலைக் கருவூலம் இருக்கவேண்டும் என்பதன் அவசியத்தைக் கருதி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கொள்கைரீதியாக முடிவு எடுத்துள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கீழ்வேளூர் வட்டத்திலும் புதிய சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்குரிய பணிகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியிலே ஆரணி வட்டாட்சியர் அலுவலகம் ஏறத்தாழ 2 ஏக்கர் பரப்பளவிலே இருக்கிறது. அதிலே புதிதாக ஒரு சார்நிலைக் கருவூலக் கட்டடம் கட்டித் தரப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, இந்திய மருத்துவ சங்கத்தில் ஏறத்தாழ 40-க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் வாரத்திற்கு ஒரு நாள் பொதுமக்களுக்கு இலவசமாக மருத்துவம் பார்ப்பதற்குத் தயாராக இருக்கின்றார்கள். எனவே அவர்களுக்கும் அந்த வட்டாட்சியர் அலுவலக வளாகத்திலே 1,000 சதுர அடியிலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கருவூலம் குறித்து மட்டும் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்று, இந்த இரண்டு வருட நல்லாட்சியில் 14 சார்நிலைக் கருவூலங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 136, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி இராமஜெயம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.